Registered as a News Paper in Ceylon P. M. G. No. H. A. 9/300 of 1953.

விரோதிஹு (1889) ஆவணிமீ 28உ ஆரம்பமானது.

# இந்து சாதனம்

சிவமயம்

வெள்ளிதோறும் வெளிவருவது

தனிப்பிரதி விலை: சதம் 10.

[புத்-எச]  யாழ்ப்பாணம்:- சுபகிருதுஹூ தைமீ உகூஉ வெள்ளிக்கிழமை (8 February, 1963) [இல-சச]

# சைவம்காக்கும் சபைமண்டபத்தை

## சதியால் பறிக்கும் கொடுமை

## நிழல்கொடுத்த கையை நீறுக்குவதா நீதி?

மேற்படி சபையானது 1925-ம் ஆண்டு சுவாமி விபுலானந்தர் அவர்களும் மற்றும் சைவப்பெரியார்களும் சேர்ந்து தொடங்கப்பெற்று, மத்தியமாகாணத்தில் சைவமும், தமிழ்க் கலாச்சாரமும் செழித்தோங்க அளப்பரும் சேவை செய்து வந்திருக்கிறது.

சபையின் தொண்டுகள் விரிவடையவே சபைக்கென ஓர் கட்டிடம் இருக்க வேண்டிய அவசியத்தை உணர்ந்த ஆயிரக்கணக்கான சைவாபிமானிகளின் தியாகம், உழைப்பு, அறிவு, ஆற்றல், கொடை, விடாமுயற்சி, தன்னலமற்ற சேவை என்றென்றும் சபை சுதந்திரமாகவும் கௌரவமாகவும் சேவை செய்ய வேண்டும் என்ற அவா, அத்தனையும் ஒன்று சேர்ந்தாற்போல், ஓர் அடுக்கு மண்டபம் 1941-ம் ஆண்டு உருவெடுத்தது. இது மலைநாட்டின் தலைநகரின் கேந்திர ஸ்தானத்தில் சைவ சமயத்தவர் யாவர்க்கும் பெருமையைக் கொடுக்கக் கூடியதாகவும், ஒருலட்ச ரூபாவுக்கு அதிகமான பெறுமதியுடனும், சமய ஒளி வீசிக்கொண்டு திகழ்கிறது.

சபை மண்டபம் நகரின் மத்தியில் வேண்டிய வசதிகளுடன் அமையப்பெற்றதால் சபை தனது சேவைகளை மென்மேலும் விருத்தியடையச்செய்து நூல் நிலையம், சமய வகுப்புகள், குருபூசைகள், சொற்பொழிவுகள், சமயப்பிரசங்கங்கள், சமய விழாக்கள், ஞாயிறு மாணவர் வகுப்புகள், போகாம்பரைச் சிறையில் ஞாயிறு தோறும் கூட்டுப் பிரார்த்தனை, பிற நாடுகளில் இருந்து வரும் சைவப் பெரியார்களுக்கு வரவேற்பு வைபவங்கள், யாத்திரீகர்கள் தங்குவதற்கு வசதியளித்தல் முதலியன சபை செய்துவரும் பல புண்ணிய கைங்கரியங்களில் சிலவாகும்.

195[illegible]-ம் ஆண்டு தொடங்கப்பெற்ற இந்துக்கல்விச் சங்கம் ஓர் பள்ளிக்கூடம் உடனடியாகத்தொடங்குவதற்குக் கட்டிட வசதி இல்லாமையால் எங்கள் சபைக் கட்டிடத்தில் ஓர் பகுதியை மூன்று வருடத்திற்கு வாடகைக்குத் தரும்படி கேட்டனர். மண்டபத்தைத் தற்காலிகமாகக் கொடுப்பதற்குப் பலத்த எதிர்ப்பு இருந்தும் சில நிபந்தனைகள் கட்டுப்பாடுகளின் பேரில், உரிமை வாடகையுடன், இ.க.சங்கத்தினர் தங்களுக்கென மூன்று வருடத்திற்குக் கட்டிடம் கட்டும்வரையும், மண்டபத்தில் ஓர் பகுதியைக் கொடுப்பதற்கு இசைந்தது. நிபந்தனைகளின் பேரில் பள்ளிக்கூட நேரம்தவிர மற்ற நேரங்களில் எல்லாம் சபைக் கட்டிடம் முழுவதும் சபையின் பொறுப்பில் இருந்தது. கால எல்லை கிட்டியதும் மண்டபத்தைக் காலி செய்யும்படி வேண்டிய பொழுது இ. க. சங்கம் தனது கஷ்டத்தை முறையிட்டதின் காரணமாக மேலும் ஒவ்வொரு வருடம் இருமுறையாக வாடகைக் கால எல்லையை நீடித்தது. ஒரு பாடசாலை நடத்துதற்கு வித்தியாபகுதியாரின் நிபந்தனைகளின்படி சுகாதாரம், விளையாட்டிடம் முதலிய வசதிகள் சிறிதும் கொண்டிராத இம்மண்டபம், தற்காலிகமாகப் பள்ளிக்கூடம் நடத்துவது என்ற காரணத்தினால் அநுமதி வழங்கப்பட்டது. பள்ளிக்கூடம் தனது சொந்தக் கட்டிடத்திற்கு மாற்றப்படமுன், துரதிஷ்டவசமாகப் பள்ளிக்கூடங்களை அரசாங்கம் எடுக்கும் மசோதா கொண்டுவரப் பட்டது இதன் பயனாக இ. க. சங்கத்தினர் தமது கட்டிடத் திட்டத்தைத் தொடரவில்லை.

இந்தச் செய்திகள் கிடைத்த உடனேயே சபை அரசாங்கத்திற்கு உண்மை நிலையைத் தெரியப்படுத்தும் போது, சபை மண்டபம் இ. க. சங்கத்திற்குத் தற்காலிகப் பாவிப்பிற்கென வாடகைக்குக் கொடுக்கப் பட்டது என்று [illegible] மண்டபத்தை [illegible] வன்முறையில் எடுக்குமா யின், சபை இ க. சங்கத்திற்கு ஆபத்தில் கருணையும் சேவையுணர்ச்சியும், நல்லெண்ணமும் காட்டியதிற்குப் பழிவாங்கும் செய்கை [illegible] ஒரு மண்டபத்தைப் பறித்தல், சபை இதுவரையும் சுதந்திரமாகச் செய்துவந்த சமயத் தொண்டுகளை ஒடுக்கும் பணியாக இருக்கும் என்றும் ஆகையால் பள்ளிக்கூடத்திற்கு, புனரமைப்புத் திட்டத்தில் பிற ஒழுங்குகள் செய்து சபைக்கட்டிடத்தைச் சபையின் பணிகளுக்கு விட்டுவிடும்படி கேட்கப்பட்டது. மேலும் சபை ஒவ்வொரு தருணத்தையும் செல்வாக்கையும் வெவ்வேறு வழிகளில் கையாண்டு சபை மண்டபத்தை அரசாங்கம் எடுக்காமல் தடுக்கப் பகீரதப் பிரயத்தனங்கள் எடுத்தது.

தொடர்ச்சி 4ம் பக்கம்

## நற் சிந்தனை

அரவார் செஞ்சடை
அண்ணல்தன் பாதம்
விரவி நிற்பவர்
வீடுபெற் றனரே.

## "எழிலி" காவியம் வெளியீட்டு விழா

—0—

எதிர்வரும் 10-2-63 ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு வண்ணார்பண்ணை நாவலர் வித்தியாசாலை மண்டபத்தில் ச வே பஞ்சாட்சரம் அவர்கள் இயற்றிய 'எழிலி' என்னும் சமூக காவிய நூலின் வெளியீட்டு விழா நடைபெறும்.

"ஈழநாடு" ஆசிரியர் திரு. இராஜ அரியரத்தினம் விழாவிற்குத் தலைமைதாங்குவார் என்றும், சமூகத்தொண்டன் ஆசிரியர் திரு. க. பே. முத்தையா (கவிஞர் விடிவெள்ளி) நூலை வெளியிட்டு வைப்பாரென்றும், 'கண்கள்' பத்திரிகை ஆசிரியர் திரு. சு. கணபதிப்பிள்ளை (சுகுணு), கவிஞர் பா. சத்தியசிலன், புலவர் நா.சிவபாதசுந்தரனுர், பண்டிதர் வ. நடராஜன் முதலியோர் எழிலி பற்றிக் கருத்துரைகள் வழங்குவர் என்றும் அந்நூலின் வெளியீட்டாளர்களான கலைச் செல்வி மாத இதழ் நிறுவனத்தார் செய்தி வெளியிட்டிருக்கிறார்கள்.

உ

எல்லா வுலகமு மானுய் நீயே ஏகம்ப மேவி யிருந்தாய் நீயே
நல்லாரை நன்மை யறிவாய் நீயே ஞானச் சுடர்விளக்காய் நின்றாய் நீயே
பொல்லா வினைக ளறுப்பாய் நீயே புகழ்ச் சேவடி யென்மேல் வைத்தாய் நீயே
செல்வாய செல்வம் தருவாய் நீயே திருவையா றகலாத செம்பொற் சோதி.

x x x

கற்பனை கடந்தசோதி கருணையே யுருவமாகி
அற்புதக் கோலநீடி யருமறைச்சிரத்தின் மேலாஞ்
சிற்பர வியோகமாகுந் திருச்சிற்றம்பலத்துள் நின்று
பொற்புடன் நடஞ்செய்கின்ற பூங்கழல் போற்றிபோற்றி.

## உயர் நீதிமன்ற விளக்கம் யாழ்ப்பாணத்தில்

—0—

குற்ற வழக்குகளை விளங்கும் உயர்நீதிமன்றக்கோடு யாழ்ப்பாணத்திற் சென்ற புதன்கிழமை வழமையான முறைப்படி ஆரம்பமானது. உயர்நீதிமன்ற நீதியரசர் திரு. P.சிறீஸ்கந்தராசா அவர்கள் தமது சமயாசார நெறிப்படி நல்லூர்க்கந்தசுவாமிகோயிலில் அன்று காலை பத்து மணிக்கு ஆராதனை தரிசித்து முருகப்பெருமானை வணங்கிப் பின் நகரமண்டபத்தில் நடைபெறும் உயர்நீதிமன்றக் கோட்டில் 11மணிக்கு யாழ்ப்பாண நீதிபதிகள் திரு. அரசு உவால்டன் அவர்கள், திரு செ. தனபாலசிங்கம் அவர்கள் ஆகியோருடன் அமர்ந்தனர். அப்பொழுது யாழ்ப்பாண மாகாண அதிபதி திரு. V. P. வித்தாச்சி அவர்கள் ஆரம்பப் பத்திரிகையைச் சமர்ப்பித்தனர். பெருந்தொகையினரான வழக்கறிஞர்களும் வேறு பிரமுகர்களும் நீதிமன்ற அலுவல்கள் ஆரம்பமாகும் வைபவத்தைக் காண்பதற்குக் குழுமியிருந்தனர்.

## வேவிற் கந்தசுவாமிகோவிற் புனருத்தாரணமும் அபிடேகமும்

கொடிகமத்திற்கயலிலுள்ள வேவிற்பகுதியில் "வேவிற் கந்தசுவாமிகோவில்" வேதாகம விதிப்படி யமைந்த மிகப் புராதனமான கோவில். ஏராளமான தருமசாதனம் விளை நிலம் தோட்டம் இருந்தும் வரும்படி கோவிலுக்குச் சேராமையால் கோவில் சில வருடங்களாகப் பூசையுமின்றி இருந்தது.

ஊரவர் சிலரது எதிர்ப்பாலும், யாழ்ப்பாணம் வைத்திலிங்கம் கம்பனி முதலாளி முதலியார் உயர்திரு. வை. மகேசன் J. P. அவர்களது பெரு முயற்சியினாலும் தென்மராட்சிக்காரியாதிகாரி அவர்களது விடாமுயற்சியினாலும் புனருத்தாரணம் செய்யப்பெற்று, தைப்பூசத்தினத்தில் (நேற்று) விசேஷ அபிடேகத்துடன் பூசையும் ஆரம்பிக்கப் பெற்றுள்ளது. பூசைக்கு ஒரு சிறந்த குருக்கள் நியமிக்கப்பெற்றுள்ளார்.

## படைவீடு வகுத்தவன்

★

### "அளவையூர் - சஞ்சீவி"

இராகம்: தோடி :: தாளம்: ஆதி

பல்லவி

சிவகுரு பரனே சரவண பவனே
திருமால் மருமக னே — தேவதேவ (சி)

அனுபல்லவி

பவவினை வேரற பத்தர்த மக்கருளும்
பாலசுப்ர மண்யா பச்சைம யில் ாகனு (சி)

சரணம்

அறம்பொரு ளின்பம் அளித்திடும் பேறு
அன்புவழி யுள்ளார்க்கு அருள்செயு மாறு
திறம்பட வகுத்தனை படைவீ டாறு
திருமுருகா எனக்குக் கதியிலை வேறு (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE HINDU ORGAN

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம்
வீழ்கதண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லா மரனுமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

சுபகிருது ௵ தை மீ
௨௬ ௳ வெள்ளிக்கிழமை

## மாணுக்கர்களும் மதநெறியும்

சமய பாடம் கட்டாய தேவையாக அமைக்கப் பெறும் இக்காலத்திற் சைவ மாணுக்கர்களின் அறிவு வளர்ச்சிக்குரிய நூல்களையும் வெளியீடுகளையும் வேறு சாதனங்களையும் அவர்களுக்குப் பயன் பெறும் வண்ணம் செய்தல் சைவ சபைகளின் கடமையாகும். இக்கருத்துக் கொண்டே சைவப்பெரியார்கள் தகுந்த சைவ பாடத் திட்டம் வேண்டுமென்றும் அது எவ்வாறு அமைதல் பொருந்தும் என்றும் எடுத்துக்காட்டியிருக்கின்றனர். சைவ பரிபாலன சபையாரும் இந்த வழியிற்பெரிதும் உழைத்து வருகின்றனர். சபையாரின் வெளியீடுகளுக்கு மேலதிகமான ஆதரவு சைவ மக்கள் ஆசிரியர், மாணுக்கர் அளிப்பதாகக் காணப்படவில்லை. இதற்குக் காரணம் கால விபரீதப் போக்கிற் கமைந்து பல திறப்பட்ட நூல்களும் வெளியீடுகளும் மலிந்து காணப்படுகின்றமையே,

இந்துசாதனம்செந்தமிழ் நடையிற் சைவ நெறி கடைப் பிடிக்கும் வெளியீடு — எழுபத்துநான்கு ஆண்டுகள் இயங்கி வந்திருக்கின்றதென்றல் அப் பெருமையே அதற்கு எழிலைக் கொடுப்பதாகும். ஐந்தாங் குரவராய்த் தமிழுஞ் சைவமும் பரிபாலித்த ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலர் அவர்கள் காட்டிய செந்நெறியின் வழி ஒழுகிவரும் சபையும் அதன் வெளியீடுகளும் இந்நாட்டின் சால்புக்குரிய சாதனங்கள், அவற்றை ஆதரிக்கும் பணி சைவ அன்பர்கள் அனைவருக்கும் உண்டு. வெளியீடுகள் பல்வேறு வகையின. உலகப்போக்குக குரியன பல, வியாபார விருத்திக்கு வேண்டியன பல. ஆனுற் புனிதமான மொழி எழிலும் சமய நெறி அமைவும் ஒழுக்க உயர்வுப் பண்பும் உடையன மிகச் சிலவே. எத்தனையோ பத்திரிகைகள் தோன்றி இடையில் மறைந்து போயின. எத்தனையோ வெளியீடுகள் தங்கள் கொள்கைகளையே மாற்றவேண்டிய நெருக்கடியில் இடருற்றன. ஆனல் என்றுமுள சைவம்போல இந்துசாதனமும் எழிலுடன் இயங்கிக்கொண்டே நிலவுகின்றது. நவநாகரிகத் தேவைக்குரிய வெளித்தோற்றமில்லாமற் சைவமும், தமிழும் தாங்கும் திருத்தொண்டாற்றி வரும் சபையையும், சாதனத்தையும் சைவ மக்கள் பொன்னேபோற் போற்ற வேண்டியவர்கள் என்பது விளம்பாமலே விளங்கும்.

# ஞானக்களஞ்சியம் திருமந்திரம்

[இந்துசாதன அபிமான நிருபர்,
திரு. மா பாலசுப்பிரமணியன், சிதம்பரம்]

சிதம்பரம் தை 16.

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம் 21 வது மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக பரமாசார்ய சுவாமிகளின் ஆணையின்படி தை மாதம் 9 ம் நாள் மாலையில் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின் முன்னிலையில் கொலுமண்டபத்தில் பிரபல எழுத்தாளர் மதுரை திரு. வி. சந்தானம் தலைமையில் 10 வது ஆண்டு திருமந்திர மகாநாடு தொடங்கியது.

ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம் அவர்கள் மகாநாட்டுத் தலைவரான திரு. வி சந்தானத்தை பொன்னுடைப் போர்த்தி மாலை அணிவித்து கௌரவப் படுத்தி வரவேற்றார்கள்.

மாநாட்டுத்தலைவர் திரு. வி. சந்தானம் பேசுகையில் திருவாவடுதுறை சித்தர்கள் வாழ்ந்துவந்த புண்ணிய தலம். திருமூலரின் திருமந்திரம் இந்தத் தலத்தில் புதைந்து கிடந்ததை 7ம் நூற்றுண்டில் திருஞான சம்பந்தர் இங்கு வந்தபோது கண்டெடுத்து வெளிப்படுத்தினுர். ஆனல் இன்று நமது குருமகாசந்நிதானம்அவர்கள்தான் இந்த 20ம் நூற்றுண்டில் சென்ற 10 ஆண்டுகளாகதிருமந்திர நூலை உலகம் பூராவும் பரப்பி வருகின்ருர்கள். இப்பணி பெரிதும் பாராட்டுதலுக்கு உரியதாகும். திருமந்திர நூலைப் பல மொழிகளிலும் வெளியிடல்வேண்டும் என்றும் தெரிவித்தார்.

அண்ணுமலைப் பல்கலைக் கழகம் தமிழ்ப்பேராசிரியர் திரு. எல். பி. கே. ஆர். இராமநாதஞ்செட்டியார் திருமந்திர மகாநாட்டைத் திறந்து வைத்துப்பேசுகையில் திருமந்திரம் ஞான நூல் மிகவும் பழமையான நூல், சில ஆண்டுகளுக்கு முன்புவரை திருமந்திரம் பயிலப்படாதிருந்தது. ஆயினும் ஸ்ரீலஸ்ரீ. குருமகா சந்நிதானம் அவர்களின் அருளினுல் திருமந்திர மகாநாடு ஆரம்பிக்கப்பட்டு 10 ஆண்டுகளாகத் திருமந்திர நூலை அறியத்தொடங்கியிருக்கின்ருேம். திருமூலரின் திருமந்திரம் சாத்திரமாகவும், தோத்திரமாகவும், சரித்திரமாகவும் விளங்குகின்றது. அது திருமந்திர நூலில் இயந்தர, மணிமந்தர மருத்துவ முறைகள் எவ்வளவு இன்றியமையாதது என்பதனை நன்கு விளக்கம் கொடுத்திருக்கின்ருர். திருமூலரின் மருத்துவ உபதேசங்களை மருத்துவர்களின் துணைகொண்டு செயல் முறைகளில் நாம் காண முற்படல் வேண்டும். அவ்வாறு செயல்படுத்த முற்பட்டால் திருமூலரின் பஞ்சகல்பம் நன்கு புலப்படும் நாம் என்றும் இளமையாக இருப்பதற்காகவே திருமூலர் பஞ்சகல்பத்தையும் திருமந்திர நூலில் கூறியிருக்கின்ருர். மேலும் திருமந்திரமும்-திருக்குறளும் ஒத்த நிலையில் பொருள்களை நிறையக்காணலாம். ஆகவே திருமந்திர நூல் உலகமெங்கும் பரவல் வேண்டும் என்றும் கூறினுர். ஆதீன மகா வித்துவான் தி ந. ச. தண்டபாணிதேசிகர் உட்பட இன்னும்பலர் உரை நிகழ்த்தினர்

## திருமந்திரம் ஞான ஆலயம்

சிதம்பரம், தை 16.

திருக்கயிலாய பரம்பரை திருவாவடுதுறை ஆதீனத்தில் 10 ஆண்டு திருமந்திர மகாநாட்டின் 2-வது நாள் நிகழ்ச்சிகள் தை 10-ம் நாள் ஆதீன கொலு மண்டபத்தில் பழநி சிவஸ்ரீ. ஈசானசிவாசாரிய சுவாமிகள் தலைமையில் தொடக்கமாகியது.

21-வது மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணியதேசிக பரமாசாரிய சுவாமிகள் மகாநாட்டின் தலைவர் பழநி சிவஸ்ரீ, ஈசானசிவாசாரிய சுவாமிகளை பொன்னுடை போர்த்தி மாலை அணிவித்து வரவேற்றுக் கௌரவப்படுத்தினுர்கள்.

ஆதீன மகா வித்துவான் திரு. ச. தண்டபாணிதேசிகர் வரவேற்புப் பிரசங்கம் நிகழ்த்துகையில் நமது சிவஸ்ரீ. சிவாசாரியசுவாமிகள் சைவ உலகுக்குப் பேரொளியைக் கொடுக்கக்கூடிய ஞாயிறு போல் விளங்குபவர் என்றும்; திருமூலர் திருமந்திரம் 3000 பாடல்களுடன் மேலும் 68 பாடல்களைச் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று கூறுகின்ருர்கள். ஆனல் திருமுறைப் பெட்டகத்தைத் திறப்பதற்குச் சாவியைக் கொடுத்துள்ள சேக்கிழார் திருமூலர் திருமந்திரப்பாடல் 3000 என்று அழுத்தத்துடன் கூறிவிட்டார். ஆகவே திருமந்திரப்பாடல் மூவாயிரப் தான்; மேலும் 68 பாடல்களையும் தானும் திருமூலரைப்போல் ஆகவேண்டுமென்ற எண்ணங்கொண்டுள்ள பொய்த்திருமூலர்கள் ஆக்கிவைத்துள்ளார்கள். உவ்வாறு செய்தது. நம் செந்தமிழ்நாடு செய்த பாவமாகும் என்றும் கூறினர்.

மகாநாட்டுத்தலைவர் பழநி சிவஸ்ரீ. ஈசானசிவாசாரிய சுவாமிகள் பேசுகையில் பாரம்பரியமாகப் பயனுடையதாகவும், நாமெல்லாம் உய்ய வேண்டியதற்காகவுமே இவ்வாதீனம் ஏற்பட்டதாகும். நாமெல்லாம் உய்யவேண்டுமென்ற பெருங்கருணையுடன் நமது ஸ்ரீலஸ்ரீ. மகாசந்நிதானம் அவர்கள் 10 ஆண்டுகளாகத் திருமந்திர மகாநாட்டை நடத்தி நம்மையெல்லாம் திருமந்திர நூலினிடம் செயல்படும்படியாகச் செய்து வருகின்ருர்கள்; வேதாகமங்களிலிருநது வடித்தெடுத்த பொருளே திருமந்திரம்; திருமந்திரம் ஞான அலயம், திருமந்திரம் சாதனைக்குரியது; பயன்தரக்கூடியதும் ஆகும். திருமூலர் திருமந்திரம் சைவ சமயக்களஞ்சியமுமாகும் என்றும் கூறினர்.

நேயர்கள் நெஞ்சம்

## வேதவாராய்ச்சி

அரவிந்தரின் சீடர்களுள் ஒருவரும் பல நூல்களின் ஆசிரியரும், விமர்சகருமான ஸ்ரீ எம். பி. பண்டிட் என்பார் சமீபத்தில் சென்னை "ஹிந்து" பத்திரிகையில் பரோடா பல்கலைக் கழக வெளியீடான 'இருக்கு வேத சோம சூக்தங்கள் (மூன்ருபாகம்)" என்ற நூலுக்கு எழுதியுள்ள விமர்சனத்தில் பின் வரும் விஷயங்கள் நோக்கத் தக்கன;—

"இந்நூல் எழுதத்தொடங்கிய காரணம் வேதங்கள், வைதிக இலக்கியங்கள்பற்றிய மொழியியல், சொற்பிறப் பாராய்ச்சித் துறைகளில் நவமாய் உதித்தவைகளை இதற்கு முன் தோன்றிய மேல்நாட்டு இந்தியப் பண்பாட்டு ஆராய்ச்சி வல்லுநரதும் சாயணர் போன்ற இந்திய அறிஞரதும் முடிபுகளுடன் சேர்த்தலே என அறிகிறோம். மேலும் இந் நூலாசிரியர் டாக்டர் பாவே வேதத்துக்குப்பொருள் கோடற்குப் பாணினி செய்த விதிகளைக் கொண்டு கடின பதங்களுக்குப் பொருள்காண முயல்கிருர். ஆயினும் இங்தோ — ஐரோப்பிய ஒப்பியல் ஆராய்ச்சித துறைகள்மூலம் கிடைத்த சரித்திர மொழியியற் சான்றுகளைத் திருப்திகரமானவை எனக்கொண்டு பாணினியின் கருத்துக்களை மாற்றவும் மறுக்கவும்கூட முற்பட்டிருக்கிருர். இது ஓர் ஆபத்தான முறையாகும். ஏனெனில் பழைய மந்திர தோத்திரங்கள் ஆராய இந்நவீன 'இயல்கள்' எவ்வளவு வலிமையற்றவை — வெறும் ஊகத்தை அடிப்படையாகக் கொண்டவை என்பது சிந்திப்பார்க்கு நன்கு விளங்கும்.

"நூலாசிரியர் இந்தச் சூக்தங்களில் 'மறை பொருள்' ஒன்று விரவி வருதலை உணர்கிருர். சோம யாகத்தில் 'ஆத்மிக பரிசுத்தம்'பற்றிக் கூறப் பட்டிருக்கிறது. (ஒன்பதாம் மண்டலம் - 67-ம் சூக்தம் - மந்திரம் 22-24) ஆனல் அவர் அதைத் தொடர்ந்து நுணுகி ஆராயவில்லை. ஸ்ரீ அரவிந்தர் வேத ஆராய்ச்சிக்கு எவ்வளவு பெரிய பணி புரிந்துள்ளார்; யாஸ்கர் சுட்டிக் காட்டியதும் சாயணர் போன்ற கிரியாவாதிகளும்குறிப்பிட்டதுமான அத்யாத்மிக வியாக்கியானத்தை அடியொற்றி அவர் வேத மந்திரங்களுக்கு உட்பொருள் கண்டுள்ளார். ஆனல் ஸ்ரீ பாவே அவரது வியாக்கியானம் பற்றி யாண்டும் குறிப்பிட்டாரல்லர். ஸ்ரீ பாவே விளக்க முடியாத விஷயங்கள் பல (உதாரணமாக சத்தியம், ருதம் என்பவற்றின் வேறுபாடு முதலியன) "வேதத்தின் இரகசியம்" என்ற பெரிய நூலில் திருப்திகரமாக விளக்கப்பட்டுள்ளன. பாவேயின் நூல்போன்ற ஓர் ஆராய்ச்சி வெளியீடு மேனுட்டறிஞரின் எல்லா முடிபுகளையும் உட்கொண்டிருந்தும் ஸ்ரீ அரவிந்தர் தம் உள் ஆழ்ந்த காட்சியின்விளைவாக உண்மையைக் கேட்ட ரிஷிகளாகிய 'மந்திர திருஷ்டாக்களின் வேத கீதங்களிலடங்கியுள்ள உயர்ந்த பேருண்மைகளைக் கண்டு விளக்கிய அரும்பொருளை ஓரிடத்திலும் எடுத்துக் காட்டாமல் விட்டது பெரும் குறையாகும்".

பீஹாரிலுள்ள சம்ஸ்கிருத சர்வகலாசாலை ஒன்றின் உயர் கலைமாணிப் பட்டப் படிப்புக்கு வேத ஆராய்ச்சியின்கீழ் ஆனந்தகுமார சுவாமியும்,

தொடர்ச்சி 3-ம் பக்கம்

நல்லைக்கீர்த்தனம் — 31.

## அக்கினிப் பொன்போலென்னை ஆக்கவோ......?

*

— யாழ்ப்பாணம் ந. வீரமணி —

இராகம் : சகாணு : தாளம் : ஆதி

பல்லவி

எற்றிவிடுதல் ஞாயமோ? — முருகா
வெற்றிவேலா வுன்பதம் பற்றிடும் என்னைநிதம்

அனுபல்லவி

சுற்றிச் சுழலுமிநதத் துன்பக் கடலில்சிக்கி
எற்றிசையும் அறியா தேங்கித் தவிக்குமென்னை

சரணம்

துன்பக் கொடுந்தீயிலே தூக்கித் தூக்கிஎறிந்து
துடிதுடித்திட வென்னை துயருறுத்தல் அழகோ?
அன்பருக் குன்னையல்லால் ஆறுதல் வேறுமுண்டோ?
அக்கினிப் பொன்போலென்னை ஆக்கவோ நல்லைத்தேவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவதிகை - மனவாசகங்கடந்தார்
அருளிச் செய்த

# உண்மை விளக்கம்

மூலமும் உரையும்

[சித்தாந்த பண்டிதர், சைவப்புலவர் இ. செல்லத்துரை]

(முற்றொடர் - 6)

### கன்மேந்திரியங்களும் அவற்றின் இயல்பும்

கண்ணுதல்நூ லோதியிடுங் கன்மேந் திரியங்கள்
எண்ணும் வசனாதிக் கிடமாக — நண்ணியிடும்
வாக்குப்பா தம்பாணி மன்னுகுதம் உபத்த
மாக்கருது நாளு மது. 14.

கொ—கூ. மன்னும் வாக்கு பாதம் பாணி குதம் உபத்தமா(க) நாளும் கருதும் கன்ம இந்திரியங்கள் (அது) நாளும் எண்ணும் வசனம் ஆதிக்கு இடம் ஆக நண்ணியிடும், (என்று) கண்ணுதல் நூல் ஓதியிடும்.

ப—ரை: மன்னும் வாக்கு பாதம் பாணி குதம் உபத்தமா க) நாளும் கருதும் கன்ம இந்திரியங்கள் (அது) - பொருந்திய வாக்கும் பாதமும் கையும் மலவாயிலும் (ஆண்) பெண் குறியும் என எப்போதும் மதிக்கப்படுகின்ற கன்மேந்திரியங்களாகிய அவை ஐந்தும், எண்ணும் வசனம் ஆதிக்கு இடம் ஆக நண்ணியிடும் - நினைக்கப்படுகின்ற வசனித்தல் நடத்தல் தானஞ் செய்தல் கழித்தல் இன்புறுதல் ஆகிய ஐந்தினுக்கும் இடமாகப் பொருந்தி நிற்கும்; (என்று) கண்ணுதல் நூல் ஓதியிடும் - என்று இங்ஙனம் இறைவனருளிய ஆகம நூல்கள் சொல்லும்.

[அது - ஒருமைப் பன்மை மயக்கம், வாக்கு - ஆகு பெயராய் வாயைக் குறித்து நின்றது. பாணி - கை குதம் - மலவாயில். உபத்தம் - ஆண் பெண் குறி. கழித்தல் என்றது மல(சல) நீக்கம் செய்தல் என்றபடி.]

பொழிப்பு: வாக்கு பாதம் பாணி பாயு உபத்தம் ஆகிய ஐந்து கன்மேந்திரியங்களும் முறையே வசனம் நடை தானம் கழிவு ஆனந்தம் என்பவற்றுக்கு இடமாக நிற்கும்,

### கன்மேந்திரியங்கள் தூல பஞ்சபூதங்களைப் பொருந்தி இயங்குமாறு

வாக்காகா யம்இடமா வந்துவச னிக்குங்கால்
போக்காருங் காற்றிடமாப் புல்கியனல் — ஏற்கும்
இடுங்கை குதநீ ரிடமா மலாதி
விடும்பா ரிடமுபத்தம் விந்து. 15.

கொ—கூ: வாக்கு ஆகாயம் இடமா(க) வந்து வசனிக்கும்; கால் காற்று இடமா(க)ப் போக்கு ஆரும்; கை அனல் புல்கி ஏற்கும், இடும்; குதம் நீர் இடமா(க) மலம் ஆதி விடும்; உபந்தம் பார் இடம் விந்து (விடும்),

ப—ரை: வாக்கு ஆகாயம் இடமா(க) வந்து வசனிக்கும் - வாய் ஆகாயம் இடமாகப் பொருந்தி நின்று வார்த்தை பேசும்; கால் காற்று இடமா(க)ப் போக்கு ஆரும் - பாதம் காற்றினிடமாகப் பொருந்தி நின்று நடத்தல் செய்யும்; கை அனல் புல்கி ஏற்கும், இடும் - கை தீயின் இடமாகப் பொருந்தி நின்று ஏற்றலும் ஈதலும் செய்யும்; குதம் நீர் இடமா(க) மலம் ஆதி விடும் - மலவாயில் நீரைப் பொருந்தி நின்று மலம் (சலம்) கழிக்கும்; உபத்தம் பார் இடம் விந்து (விடும்) - ஆண் (பெண்) குறி நிலத்தினிடமாகப் பொருந்தி நின்று தாதினை விட்டு இன்பமடையும்.

பொழிப்பு: வாக்கு ஆகாயத்தையும், கால் காற்றையும், கை அனலையும், குதம் நீரையும், உபத்தம் நிலத்தையும் பொருந்தி நின்று முறையே பேசுதலையும் நடத்தலையும் ஈதலேற்றலையும் மலசல விமோசனத்தையும் விந்து விடுதலையும் செய்யும்.

### அந்தக் கரணங்களும் அவற்றினியல்பும்

அந்தக் கரண மடைவே யுரைக்கக்கேள்
அந்தமனம் புத்தியுட னாங்காரம் — சிந்தையிவை
பற்றியது நிச்சயித்துப் பல்கா லெழுந்திருந்தங்
குற்றதுசிந் திக்கு முணர். 16.

கொ — கூ: (மாணவகனே) அந்தக்கரணம் அடைவே உரைக்கக் கேள், அந்த மனம் புத்தி ஆங்காரம் உடன் சிந்தை இவை (அந்தக்கரணமாம்); (இவற்றுள்) (மனம்) பற்றியது (புத்தி) நிச்சயித்து (ஆங்காரம்) பல்கால் எழுந்து இருந்து (ஊக்குவிக்க) (சித்தம்) அங்கு உற்றது சிந்திக்கும் (என்று நீ) உணர்

ப—ரை: அந்தக் கரணம் அடைவே உரைக்கக் கேள் - மாணவகனே, (கன்மேந்திரியங்களைப்பற்றிச் சொன்னோம் இனி) அந்தக்கரணங்களைப்பற்றி முறையே சொல்லுகின்றோம் கேட்பாயாக; அந்த மனம் புத்தி ஆங்காரம் உடன் சிந்தை இவை (அந்தக்கரணமாம்) - அந்த மனம் புத்தி அகங்காரம் என்பவற்றுடன் சித்த

(தொடர்ச்சி 4ம் பக்கம்)

## வாழ்க மணமக்கள்

இந்துசாதனம் அச்சகத்தில் வேலை பார்ப்பவரும், யாழ். சைவபரிபாலன சபை செயற்குழுவில் உறுப்புரிமை வகிப்பவருமான திரு. த. செல்லையாவின் மகன் குஞ்சிதபாதத்திற்கும் செல்வி மகேஸ்வரிக்கும் சென்ற 3-2-63 இல் திருமணம் சைவமுறைப்படி சிறப்பாக நடைபெற்றது.

## வேதவாராய்ச்சி

2-ம் பக்கத் தொடர்ச்சி

ஸ்ரீ அரவிந்தரும் எழுதிய வேதசம்பந்தமான நூல்களும் குறிப்பிடப்பட்டுள்ளன,

கல்கத்தா இராம கிருஷ்ண மடத்து கலாசார கழகத்தின் வெளியீடாகிய "இந்திய கலாசார பிதிரார்ஜிதம்" என்ற தொகுதியில் 'வேத விளக்கம்' என்ற கட்டுரையாசிரியர் ஸ்ரீ அசில், பரன் பழைய வியாக்கியானங்களையும் நவீன மேனாட்டு முறையினையும் விளக்கியபின், 'சமீப காலத்தில் இந்தியாவில் இருவேறு முறைகளைப் பின்பற்றிவேதத்துக்குப் பொருள் காணும் முயற்சி நடைபெறுகிறது. ஒன்று சுவாமிதயானந்தரைப் பின்பற்றிய ஆரிய சமாஜிகளின்முறை; மற்றது, ஸ்ரீ அரவிந்தரைப் பின்பற்றிய "புதுச்சேரி" முறை இவைபற்றிய ஆராய்ச்சிகள் அறிஞர் அனைவரின் கவனத்துக்குஉரியன. இவை 'வேத ஆராய்ச்சியில் ஒரு புதிய இராஜ பாதையையே திறந்து விடக்கூடும்' எனக் குறிப்பிடுகிறார்.

நவீன கல்வி கற்ற நம்மவர் இன்னமும் மேனாட்டு முறையினையே வாயூறிப்பின்பற்றி வருகின்றனர், வாழ்க்கையின் எத்துறையிலும் மேனாட்டு நாகரீகம் நம்மை வெற்றிகொண்டுவிட்டது நம் இலக்கியங்களையும் சமயத்தையும்கூட மேனாட்டவரின் சரித்திர ஆராய்ச்சிக் கண்கொண்டே நோக்குகின்றனர். சென்ற நூற்றாண்டில் மேனாட்டுக் கலாபீடங்களில் அச்சியற்றப்பட்ட வேத ஆராய்ச்சி நூல்கள் பல சென்ற சில வருடங்களுள் இந்தியாவில் மீண்டும் அச்சிடப்பட்டுள்ளன. அரை நூற்றாண்டுக்கு மேலாக எத்தனையோ புதிய ஆராய்ச்சிகள் வெளிவந்தும அவற்றைப் பொருட்படுத்தாமல் பழைய பகுத்தறிவு மாயைக்குட்பட்ட பத்தொன்பதாம் நூற்றாண்டுக் குப்பைகளை மீண்டும் அச்சுவாகனமேற்றிப் பவனிவிடுதல் இந்திய மாணவர்களைப் பழைய பாரம்பரியத்திலிருந்துவிலக்கி நவீன மேற்றிசைக் கருத்தில் வளரச் செய்வதற்கே உதவும்.

[நம் பொ. க. த. சமய பாடத் திட்டத்திலும் இந்து மத நூல்களின் கால ஆராய்ச்சி இடம்பெற்றது இம் மேனாட்டு முறைக் கல்வி கற்றோரின் சிந்தனையினாலேயே என்பதுசொல்லாமலே விளங்கும். பாவம், சமய பாடபுத்தகம் எழுதுவோர் மக்டொனலையும் கீத்தையும் சான்று காட்டாமல் வேறு என் செய்ய முடியும்?]

"அ. த."
கரம்பன், ஊர்காவற்றுறை.

## திருக்கேதீச்சரத்தில் மகாசிவராத்திரி

திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபையார் இவ்வருடம் (22-2-63)ல் திருக்கேதீச்சரத்தில் நடைபெற வேண்டிய மகாசிவராத்திரி தின ஒழுங்குகளுக்கு தற்பொழுதிருந்தே வேண்டிய ஏற்பாடுகளைக் கவனித்துவருகின்றனர்.

இந்தியாவில் இருந்தும் இலங்கையின் பல பாகங்களில் இருந்தும் விழா வைபவத்திற்பங்கு பற்றுபவர்களும் யாத்திரீகர்களுமாக பல ஆயிரக்கணக்கான அடியார்கள் வருவதற்குஏற்பாடுகள் நடைபெறுகின்றன.

புகையிரதப் பகுதியார் விசேடப்புகையிரதப்போக்குவரத்துக்களை ஒழுங்கு செய்திருக்கிறார்கள். பஸ் போக்குவரத்துப் பகுதியாரும் யாழ்ப்பாணம், வவுனியா முதலிய இடங்களுக்கூடாகநேரடியாக ஆலயத்திற்குப் போகவும் வரவும் அதிக வாகனங்களை ஒழுங்கு செய்திருப்பதுடன் பல ஊர்களில் இருந்தும் வவுனியா, மன்னார்போன்ற புகையிரத நிலையங்களில் இருந்தும் யாத்திரீகர்கள் ஆலயத்திற்கு இரவும் பகலும் வந்துபோவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைக் கவனித்து வருகிறார்கள். ஆலயத்திற்கு வரும் யாத்திரீகர்களுக்கு தங்குவதற்கும் சாப்பாடு தண்ணீர் வசதிக்கும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

இரவு முழுவதும் நடைபெறும் நிகழ்ச்சிகளில் இந்தியாவில் இருந்தும் இலங்கையில் இருந்தும் பல சங்கீத வித்வான்களும் சொற்பொழிவாளர்களும் பங்குபற்ற இருக்கிறார்கள் என அறிகிறோம். விழா நிகழ்ச்சிகளை இலங்கை வானொலி மூலம் ஒலிபரப்புவதற்கும் முயற்சிகள் நடைபெறுகின்றன.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம்
டிஸ்திறிக் கோட்டில்

கொக்குவில் கொக்குவில்கிழக்கு
நாகன் வேலன்
வழக்காளி.

வழ. இல. M B 4754

எதிராக

கொக்குவில்கிழக்கு அம்பந்தோலை
சின்னவன் காத்தி
எதிராளி.

யாழ்ப்பாணர் டிஸ்திறிக்கோட்டின் M B 4754ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1963ம் ஹூ மார்ச் மீ 9உ (9-3-63) சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 848. மேலும் 800 ரூபாவுக்கு 16-4-62 திகதி தொடக்கம் 19-7-62 வரைக்கும் வருடமொன்றுக்கு 12 வீத வட்டியும் அதன் பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரைக்கும்வருடமொன்றுக்கு 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 164-52 சதமும்.

காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணப் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி நல்லூர்க் கோவிற்பற்று கொக்குவில் கிழக்கிறை "மாப்பியன் தம்பசிட்டி" குளிகள் 13½ வீடும் பயிர்களும் வடமேற்கேயிருக்கும் கிணற்றில் பங்கும், கிணற்றுக்கும் றோட்டுக்கும் போக்குவரவு செய்யும்பாதையுரித்தும், இதற்கு எல்லை கிழக்கு சடையன் செல்லனினுதனம். வடக்கு ஒழுங்கை, மேற்கு வேலன் சின்னவனினுதனம். தெற்கு சின்னவன் வயித்தியினதும் வேலன் முருகனினதுமாதனம். இதடங்கலும்.

வி. செ. குட்டிப்பிள்ளை,
Court Commissioner,
Auctioneer & Valuer. 21—1—63.
193 காங்கேசன் துறை வீதி,
யாழ்ப்பாணம்.
M 255 8-2-63.

## ஈழத்துச் சிவனடியார் திருக்கூட்டம்

ஈழத்துச் சிவனடியார் திருக்கூட்டத்தினர் எதிர் வரும் 22-2-63 வெள்ளிக்கிழமை மகா சிவராத்திரி அன்று திருக்கேதீஸ்வரம் திருவாசக மடத்தில் காலை 7 மணி முதல் மாலை 6 மணி வரையும் திருவாசக பாராயணம் தியானம் கூட்டு வழிபாடு இவைகள் நடத்தி அதன் மேல் திருக்கேதீஸ்வரம் கோவில் வழிபாட்டிலும் கோவிலில் நடக்கும் விசேடங்களிலும் கலந்து கொள்வார்கள். அடுத்தநாள் காலை திருவாசக மடத்தில் மகேஸ்வர பூசையும் நடத்துவார்கள்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்
கோட்டில்

வேலணை கிழக்கு
அருணசலம் சிவகுருநாதர்
—வழக்காளி.

இல. M. B. 2676

எதிராக
வேலணை கிழக்கு
வயித்திலிங்கம் நாகலிங்கம்
—எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 2676 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1963ம் ஹூ மாசி மீ 27ம் திகதி புதன்கிழமை முற்பகல் பத்து மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- முதல் வட்டி ரூபா 748.ம் ரூபா 500க்கு 28-1-1959தொடக்கம் 16-11-1960 வரை 12 வீதமான வட்டியும் அதன்மேல் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீதமான வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 175-23 சதம்.

காணிகளின் விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக்தீவுப்பகுதி வேலணைக் கோவிற்பற்று வேலணை கிழக்கிறை "முக்கியன் தறை" பரப்பு இல ஒன்பது (9) பனைகள் வடலிகளும் எல்லை கிழக்கு ஒழுங்கை. வடக்கு றோட்டு. மேற்கு பெருமாள் கந்தையாவிற்கும் சகோதரனுக்கும் சகோதரிகட்குமுரியவாதனம். தெற்கு ஆறுமுகம் பெண் தங்கமுத்துவிற்குரியவாதனம். இதடங்கலிற் சொரியலாயவரைவாசி.

(2) ஷை யிறை "இலுப்பையடி சாட்டிக்குத் தெற்கு இலுப்பையடியிற் சாட்டி" பரப்பு இல பதினைந்து (15) பனைகள் வடலிகளும் எல்லை கிழக்கு ஒழுங்கை. வடக்கு செல்லத்துரைக்கும் மறுபேர்கட்குமுரியவாதனம், தெற்கு அம்பலவர் இரத்தினசபாபதிக்குரியவாதனம். இதடங்கலும்.

1962-ம் ஹூ மார்கழி மீ 17-ம் உ

வை. ஏரம்பமூர்த்தி,
கொம்மிஷனர்,
M. 256, 8-2-63.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்மை விளக்கம்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

மும்சேர இந்நான்கும் அந்தக்கரணங்களாகும்; (இவற்றுள் மனம்) பற்றியது - இந்நான்கினுள் மனமானது விரும்பிச் சேர்ந்துகொண்ட விடயத்தை, (புத்தி) நிச்சயித்து - புத்தி ஆராய்ந்து வரையறை செய்து உறுதியாய் நிற்க, (ஆங்காரம்) பல்கால் எழுந்து இருந்து - அகங்காரம் இதனைச் செய்வேன் எனப் பலமுறையும் எழுந்திருந்து ஊக்குவிக்க, (சித்தம்) அங்கு உற்றது சிந்திக்கும் (என்று நீ) உணர் - சித்தம அதன் பயனைய் அங்கே நிகழ்ந்த விடயத்தைச் சிந்தித்து முடிந்த முடிபாக ஏற்றுக்கொள்ளும் என்று நீ உணர்வாயாக.

பொழிப்பு: மனம் புத்தி அகங்காரம் சித்தம் ஆகிய அந்தக்கரணங்கள் (நான்கும்) முறையே விடயத்தைப் பொருந்துதலையும், நிச்சயித்தலையும், எழுந்திருந்து ஊக்குவித்தலையும், சிந்தித்து முடிபுகாணுதலையும் உடையன.

—தொடரும்.

# சைவம் காக்கும் சபை ……..

1-ம் பக்கத் தொடர்ச்சி

சபையின் விளக்கங்களையும், நியாய எடுத்துக்காட்டுகளையும், நேர்முக விவாதங்களையும், வேண்டுகோள்களையும் எள்ளளவேனும் கவனியாது சபைக்கட்டிடங்கள், நிலம் ஆகிய அத்தனையையும் கைப்பற்றும் உத்தரவை 10-11-62 திகதியிடப்பட்டதும், 13389 இலக்கம் கொண்டதுமான அரசாங்க வர்த்தமானியில் வெளிவந்த திடுக்காடும்துக்ககரமுமான செய்தியை ஆற்றொணாத்துயரத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறது. சபையின் நோக்கம், ஆக்கப் பணிகள், ஆயிரக்கணக்கான சைவ அன்பர்கள் இருதய சுத்தியுடனும், தன்னலமற்ற தியாக சிந்தையுடனும், பணியாற்றி கட்டிக் காத்து வளர்த்த அத்தனைக்கும் அரசாங்கத்தின் செய்தி சாவுமணியடிப்பதுபோல் இருக்கிறது. பணநெருக்கடியான இந்தச்சந்தர்ப்பத்தில் இதுபோல் ஒரு மண்டபத்தைக் கட்டுவதற்கு வேண்டிய வசதியான இடமும் பணமும்சேவையாளரும்கிடைப்பது எவ்வளவு கடினம் என்பது பொதுநலத் தொண்டு இயக்கங்களில் ஈடுபாடுடைய உங்கள் எல்லோருக்கும் நன்கு விளங்கும். ஆகவே சபை மண்டபத்தை அரசாங்கம் எடுக்காது காப்பது உங்கள் ஒவ்வொருவரினதும் தலையாய கடமையாகும்.

சைவப் பெருங்குடிமக்களே!

இன்று இருக்கும் சூழ்நிலையில் உங்கள் அரும்பெரும் செல்வமாகிய, உங்கள் பெரியோர்கள் அரும்பாடுபட்டுக் கட்டிய, உங்கள் நன்மைக்காய, உங்கள் விருத்திக்காக, இந்துசமுதாயத்தின் பிற்சந்ததிகள் பெருமையுடன் பயன்பெறக்கூடிய, மத்தியமாகாணத்திலே சைவ சமயம் தழைப்பதற்கு, சைவமகாசபைக் சைவ மகாசபைக் கட்டிடத்தையும் நிலத்தையும் அரசாங்கம் தனது உடைமையாக எடுக்கும் நடவடிக்கைக்குக் காலதாமதம் செய்யாது உடனே உங்கள் எதிர்ப்பைக்காட்டியும் சபை நடவடிக்கைகளுக்கு உங்கள் மனப்பூர்வமான ஆதரவையும், ஒத்துழைப்பையும் கொடுத்தல் உங்கள் கடமையாகும். நமக்கென்ன என்று அசட்டையாக இருப்பார்களாயின் இதனால் விளையும் பழி சைவம் உள்ளளவும் நிலைநிற்கும்.

இறைவன் திருவருள் துணைகொண்டு, வந்த இன்னலை நீக்க முன்வருமாறு உங்கள் அனைவரையும் சபை தாழ்மையாகக் கேட்டுக்கொள்கிறது.

வாழ்க சைவசமயம்.
வளர்க சைவநெறி.

சி. செ. இலங்கையர்,
மு. [illegible]
[illegible].

## திருமதி. பாலாம்பிகை அம்மையார் பிரிவு

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையின் உபதலைவரும் இச்சபைக்கு நீண்டகாலமாக அளப்பரிய சேவை செய்துவருபவரும் வழக்கறிஞருமான திரு S சிவசுப்பிரமணியம் அவர்களின் மனைவியாரும் தமிழரசு வாலிப முன்னணி யாழ்ப்பாணக் கிளையின் தலைவரும் நியாயவாதியுமான திரு. கதிரவேற்பிள்ளை அவர்களதும், நியாயவாதி திரு. அம்பலவாணரினதும் நியாயவாதி சண்முகநாயகம் மனைவி வள்ளிநாயகி அவர்களதும் செல்வி தையல்நாயகி அவர்களதும் தாயாரும் சிவபத்தி மிக்கவருமான பாலாம்பிகை அம்மையார் அவர்கள் 3ம் தேதி சனிக்கிழமை பிற்பகல் சிவபதம் அடைந்தார். அவர் ஆன்மா சாந்தி அடைவதாக.

—:—

## ரமண ரிஷி குருபூசை

‘மாணவர்கள் பஞ்சமா பாதகங்களில் நின்றும் விலகி ஒழுங்குக் கட்டுப்பாட்டுடன் வாழப்பழகினால் அவர்களின் வருங்கால வாழ்வு செழுமையாக அமையும்” இவ்வாறு திருமதி (டாக்டர்) சரோஜினி ராமானுஜம் அவர்கள் 31-1-63 வியாழன் மாலை கண்டி சைவமகாசபை மண்டபத்தில் நடைபெற்ற ரமணரிஷியின் குருபூசையின்போது உரை நிகழ்த்தினர்.

திரு. சிவநாதபிள்ளையும் ஏராளமான மாணவர்களும், மாணவிகளும் கூட்டுப்பிரார்த்தனையும் பஜனையும் நடத்தினர்கள். மாணவர்கட்குக் கடவுள் படங்களும், பிரசாதமும் வழங்கப்பட்டன.

---

இவ்வாரம் 10-2-63 — 16-2-63

# உங்கள் பலன்?

[ ஸ்ரீ இராதாகிருஷ்ணன் கணிப்பது ]

**மேடராசி** அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.

பழைய முதலீடுகளில் இலாபமும் நண்பருடைய பெரும் உதவியும் வழமையிலும் அதிக வேலையும் உண்டாம்.

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்,

புதியமுயற்சிகளுக்குநல்லவாரம். பணஇலாபமும் விவசாயவெற்றியும் நிச்சயம். நிம்மதி இருக்காது. தந்தையின் உறவினர் தொல்லை தருவர்.

**மிதுனராசி** மிருகசீரிடம், 2 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1ம், 3ம் பாதம்.

நண்பர்களுடன் சச்சரவுக்கு இடமுண்டு. பணமளவில் நல்ல வாரம் சொந்தப்பிரச்சினைகள் சில தீர்வுபெறும். நண்பர்கள் இடரிலிருந்து மீட்பர்,

**கடகராசி** புநர்பூசம் 4ம் பாதம், பூசம் ஆயிலியம்.

அலுவலகத்தில்சச்சரவும்உடல் நிலைப்பாதிப்பும்ஏற்படும். இரகசிய எதிரிகள்பற்றி எச்சரிக்கை! புது முயற்சிகள் தடங்கல்படும்.

**சிங்கராசி** மகம், பூரம். உத்தரம் 1-ம் பாதம்.

சிறு உடல்நிலைக் கோளாறுகள் தவிர மற்றும்படி இவ்வாரம் சாதகமானது. எதிரிகளுக்குஇடையூறும் உமக்குப் புகழும்ஏற்படும். கண்ணோய்க்கிடமுண்டு.

**கன்னிராசி** உத்தரம் 2,3 4 பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

புதிய முயற்சிகளுக்கு ஏற்ற வாரம். நிலபுலங்களால் இலாபம் நிச்சயம் நண்பர்கள் இக்கட்டிலிருந்து காப்பர். இனி வருங்காலம் நல்லகாலம்.

**துலாம்,** சித்திரை 3 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்

தம்பி தங்கைகள் மிகஉதவுவர் பணமளவில் நல்லவாரம். ஆனால் நிம்மதி இருக்காது. இனத்தவருடன் மோதல்களுக்கிடமுண்டு

**விருட்சிகராசி** விசாகம் 4.ம் பாதம் அநுஷம், கேட்டை.

தொழில்வெற்றி நிச்சயம். சில நன்மாற்றங்கள் உண்டாம். தந்தையாருக்குச் சுகவீனம் அல்லது தந்தைவழி உறவினரின்தொல்லை உண்டாம்.

**தனுராசி** மூலம், பூராடம் உத்தராடம் 1ம் பாதம்.

சில நன்மாற்றங்கள்உண்டாம். புதிய முயற்சிகள் தடங்கல்படும். ஆனால் வெற்றி பெறும்.

**மகராசி** உத்தராடம் 2,3,4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்,

ஞாயிறு திங்கள் எச்சரிக்கையோடு கழிக்கப்பட்ட வேண்டும். குடும்பநிலை திருப்திகரமாயிருக்காது. பணமளவில் நல்லவாரம்

**கும்பராசி** அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்,

முதலிருநாட்களும் சாதகமானவை. செவ்வாய் புதன் எச்சரிக்கையோடு கழியவேண்டும். மிகுதி நாட்கள் திரும்பவும்சாதகமாகும்.

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி.

வயிற்றுக்குழப்பம் தொடரும் பண இலாபம் நிச்சயம். புதிய முயற்சிகள் தடங்கல்படும். ஆனல் வெற்றி பெறும். வியாழன் வெள்ளி சனி காலை எச்சரிக்கையோடு கழியவேண்டும்.

---

# யாழ்ப்பாணத் தமிழ் அரசுத் தலைநகரும்

பண்டிதர் பொ, ஜகந்நாதன்

தமிழரசர் காலந்தான் தமிழனின் சுதந்திரகாலம். இன்றைய கலை, கலாச்சாரம் உருவாகிய காலம் அடியார்க்குநல்லார் போன்ற புலவர்பெருமக்கள் அமைச்சுரிமை பூண்டு அரசியல் நடத்திய காலம் அக் காலத்திலேதான் முழு இலங்கையும் ஒரு தமிழ் மன்னன்கீழ் இருந்தது. சிங்கள நாட்டிலும் தமிழன் கொடி பறந்தது, அது தமிழன் அரியாசனம் ஏறி மணிமுடி தரித்து அரசாண்ட காலம்.

அக்காலம் உக்கிர சிங்கன் கந்தரோடையில் தலைநகர் அமைத்த கி. பி. எட்டாம் நூற்றாண்டு தொடங்கி, சிங்கையாரியபரம்பரைக்கடைசி அரசனாகிய சங்கிலி குமரன் போர்த்துக்கேயரால் சிறைபிடிக்கப்பட்ட கி. பி. பதினேழாம் நூற்றாண்டின் ஆரம்பம்வரை ஏறக்குறைய எட்டு நூற்றாண்டுகளாகும். இக்காலத்தில் வடஇலங்கையிலே மூன்று இராசபரம்பரையும் நான்கு தலைநகரங்களும் இருந்தன. இத்தலைநகரங்களைப்பற்றியும் இதில் அரசுபுரிந்த தமிழ் அரசர்களைப்பற்றியும் கைலாயமாலை, வையவமாலை முதலாம் முதனூல்களையும், பண்டைய யாழ்ப்பாணம், யாழ்ப்பாண வைபவ விமர்சனம் ‘கொங்கெஸ்ட் ஓவ் சிலோன்’ முதலாம் பிற்கால ஆராய்ச்சி நூல்களையும் துணைக்கொண்டு அவற்றுள நம ஆய்வையும் செலுத்திச சொல்லப் போனல் கந்தரோடையிற்கட்டப்பட்ட கதிரைமலையும், வல்லிபுரத்தில் கட்டப்பட்ட செங்கடக நகர் (செங்கடற்கல நகரி)யும், யாழ்ப்பாடியின் யாழ்ப்பாணமும், நல்லூரில் கட்டப்பட்ட சிங்கைநகரமும் தலைநகரங்களாக இருந்தனவென்று நமக்குத் தோன்றுகின்றன. இவை முதனூற்கருத்துக்களைத் தழுவிச் செய்யப்பட்டமுடிபுகள். கதிரைமலை, செங்கடகநகரி, யாழ்ப்பாடியின் யாழ்ப்பாணம் என்பன கி. பி. எட்டாம் நூற்றாண்டு தொடங்கி பதின்மூன்றாம் நூற்றாண்டின் மத்தியபகுதிவரையும் இருந்தன. நல்லூர்ச் சிங்கைநகர் பதின்மூன்றாம் நூற்றாண்டின் மத்தியபகுதி தொடங்கி பதினாறாம் நூற்றாண்டின் இறுதி முடியும்வரை இருந்தன. இவைஇவ்வாறாக, பிறஆராய்ச்சிக்காரர் செய்து வைத்துள்ள சரித்திர முடிபுகள் இன்றைவரை அவ்வாறு இல்லை. கதிரைமலையைப் பற்றி மட்டும் கருத்துவேற்றுமையில்லை. ஏனையவற்றுள் அதிகம் வேற்றுமையுண்டு. செங்கடகநகர் என்பது ‘செங்கடகலெ’ என்பதன் சிதைவு. அது கண்டியையே குறித்து வந்ததென்பாரும், செங்கடகநகர் என்பதொன்று வடவிலங்கையில் இருந்ததாகத் தெரியவில்லையே வைபவமாலை விட்ட பிழையோ, வைபவமாலையைப் பார்த்தெழுதினவர் விட்ட பிழையோதான் ஆகவேண்டும். அது சிங்கைநகரைத்தான் அவ்வாறு தடுமாற்றமாக அந்நூல் சொல்லியிருக்க வேண்டும் என்பாரும்; யாழ்ப்பாடியைப்பற்றிய கதை வெறும் புனைகதை, அவனும் இல்லை, அவன் பாடிய யாழ்ப்பாணமும் இல்லை என்று வைபவமாலை, கைலாயமாலையில் இருந்து அப்பகுதியை விலக்கி வைக்க வேண்டும் என்பாரும் நல்லூர் நகரம் ஒன்று சிங்கை நகரம் இன்னொன்று நல்லூர் நகர் நல்லூரியிலும் சிங்கை நகர் வல்லிபுரத்திலும் உள்ளதாய் வெவ்வேறு காலங்களிலிருந்த நகரங்கள் என்பாருமாய் இவ்வாராய்ச்சிக்காரர் தத்தம் ஆராய்ச்சிகளை முடிந்திருக்கின்றனர். கதிரைமலையைப்பற்றி அபிப்பிராய வேறுபாடின்மையின் அதனை விடுத்து 2ம்-வது ஆக நின்ற செங்கடகநகர்பற்றிக் கொஞ்சம் விசாரிப்பாம்.

—தொடரும்.

---

## சண்டேசுர நாயனர் குருபூசை

நாள்: சுபகிருது ஹூ தைமீ உகூ உ (11 - 2 - 63) திங்கட்கிழமை.

இடம் : சைவ பரிபாலன சபை நாவலர் ஆச்சிரம மண்டபம்

நிகழ்ச்சிகள்:

மாலை 6½—7 கடவுளாராதனை
தமிழ்மறையோதல்
ஸ்ரீமத். தி. கலியாணசுந்தரக் குருக்கள் அவர்கள்

விரிவுரை;
‘சிவபூசைமகிமை’
சைவப்பிரசாரகர் திரு. பொன் அப்புக்குட்டி அவர்கள்
‘பசுவோம்பல்’
சைவப்புலவர் திரு. வ. கந்தசுவாமி அவர்கள்

சைவாபிமானிகள் யாவரும் சமூகமளிப்பார்களாக

மு. மயில்வாகனம்
சமயப்பிரசார அமைச்சர்,
சைவபரிபாலனசபை,
யாழ்ப்பாணம். 8-2-63.

## பேராதனையில் விண்ணும் மண்ணும்

பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்ச்சங்கத்தினரின் இரண்டாவது வெளியீடாக விண்ணும் மண்ணும் சிறுகதைத் தொகுதி வெளிவருகிறது. வெளியீட்டு விழா எதிர்வரும் 10-2-63 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு, பேராதனை கலை மண்டபத்தில் நடைபெறும். கலாநிதி சு வித்தியானந்தன் தலைமையில் திரு. சொக்கனுல் நூல்வெளியிடப்படும்.

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறை வீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில், யாழ்ப்பாணம் பிறவுண்வீதி, 2ம் ஒழுங்கை, 2ம் இலக்கத்தில் வசிக்கும் திரு. ஐயம்பிள்ளை சின்னத்துரை அவர்களால் 8-2-1963 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.
ஆசிரியர், நம. சிவப்பிரகாசம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org